செவ்விதழே செவ்விதழே
ஏன் சிவந்தாய்?
முத்தமழையில்
நனைந்து
காதல் சுரத்தால்
கனிந்து
சிவந்தாயா?

உன் முதல்
முத்தத்தால்
சிவந்த என்
செவ்வாயிதழ்கள்
செம்மை இன்னமும்
மாறாத மாயம்தான்
என்ன?-காதலா?

கோடி முத்தங்கள் பருகியும்
என் கொவ்வைச்
செவ்வாயிதழ்
காயம் ஆறவில்லை
கண்ணாளா இன்னும் ஒரு
முத்தம் கொடு
காயம் ஆறட்டும்

ஏன் சிவந்தாய்
என் செவ்வாயிதழே -
இதழமுதம் பருகவரும்
என்னவர்
செவ்வாயிதழ் கண்டு
நாணிச் சிவந்தாயோ?

.

எந்நாளும் வாடாத
செவ்வாயிதழ்கள்
மூக்கனியிலும்
தேனாயினிக்கும்
கனியிதழ்கள்



காதல் நெஞ்சின்
விடாய் தணிக்க
கனிரசமாய் -முத்த
தேனமுதை சுரக்கும்
அட்சய பாத்திரமா
கன்னிமயிலே-உன்
செவ்வாயிதழ்கள்?

கள்ளோ தேனமுதோ
அள்ளி அள்ளி ஆசை
தீர பருகியும
தாகம் தீரவில்லை
காதல் போதையும்
தணியவில்லை



தேவரும் அருந்தி மகிழ்ந்த
அமுதோ
அன்பே உன் செவ்வாயில்
ஊறுவது

இதழ்களால்
இதழ் கள்ளை பருக
இதழ்களே-இதழ்களில்
எழுதும்
காவியமா முத்தம்

உன் செவ்வாயிதழ்
தேன் சுவையால்
காலமும்
மறைந்ததடி
கன்னிமயிலே
காதலும் மலர்ந்ததடி

உன் கொவ்வை
செவ்விதழில்
ஊறித் ததும்புவது
கள்ளோ?
பூந்தேனோ

ஆசைதீர அருந்தியும்
மீண்டும் மீண்டும்
அருந்த தூண்டும்
காதல் கனிரசத்தை
யார் வைத்தார்-உன்
செவ்வாயிதல்களில்?

முதல்
முத்தத்தால் நீ
எழுதிய காதல்
இன்றும் என்
இதயத்தில்
தேனாய்
இனிக்குதடா

வாடாத செம்பூவாய்
தேனிதழ்கள்
வற்றாத தேன்
சுனையாய்
முத்தங்கள்

இதழ்கள் இதழ் ‘கள்”
சுவைத்து
இதழ்கள்ளில் இன்புறும்
காதல்போதை நிலைகள்
முத்தங்களோ?

இதழ்களே
இதழ்களில்
இசைமீட்கும்
அமுதகான
நிலைகளோ
முத்தங்கள்

செவ்வாயில் பூத்த
செந்தேன் மலரை
செவ்வாயால் சூடுவது
முத்தங்களோ?





கொஞ்சும் கிளியே
காதல் புறவாவே
நெஞ்சுற்ற காதல் பிணி
நீங்க
அருமருந்தாய்
செவ்விதழ் ஊறும்
செந்தேன் தருவாயா
கொஞ்சம் தருவாயா
கொஞ்சித் தருவாயா
கெஞ்சி கேட்கின்றேன்
அன்பே
உன் காதலன்.

செவ்வாயில்
மூண்ட
காதல் செந் தீ
அணைக்க
செவ்விதழால்
முத்தமழை
பெய்யடி

இதழ்களில்
இதழ்களே
இடி மின்னலின்றி
பெய்யும்
இன்ப மழையோ
முத்தங்கள்

வண்ண நிலவோ
வாச மலரோ
எண்ணமெல்லாம்
நிறைந்த
இன்பத் தேனோ
கன்னமெல்லாம் சிவக்க
காதல் சொன்ன
என் தேவதை

இதழ்களே
இதழ்களில் சக்கி
முக்கி
கந்களாய்
உரசிக்கொள்ள
இதயத்தில்
மூண்டதோ
காதல் தீ

இதழ்களே-இதழ்களில்
எழுதும்
இன்பகவிதையோ
முத்தம்
இதயவாசலில்
இதழ்கள் போடும்
அன்பு கோலங்களோ
முத்தம்



கன்னி மயிலே
உள்ளம்
கனிந்தது
உன்னால்
எனச்
சொல்லவோ
நாணிச்சிவந்தன
என் இதழ்கள்

கண்ணாளா
உன் மீது
காதல் வந்தது
என
சொல்லவோ
நாணிச்
சிவந்தது
என்
கொவ்வை
இதழ்கள்

காதல் காயத்தால்
கன்றிச் சிவந்த
இதழ்களுக்கு
கண்ணாளா
முத்தத்தால்
கட்டுப்போடு

எண்ணிச்
சிவந்தனவோ
இட்ட முத்தம்
போதென்று
கொவ்வை
செவ்வாயிதழ்கள்



செவ்விதழே-
செவ்வாயிதழே
ஏன் சிவந்தாய்
அன்று தந்த ஒரு
முத்தம்
போதென்றா
இன்று
வாடிச்
சிவக்கின்றாய்?

இதழ்களால்
இதழ்கள்
கடைந்து
“வானவர்
அமுதெடுக்க”
வாராய்
பெண்ணே

கொட்டும் முத்த
மழையின்றி
காதல் கோடையில்
கன்றிச் சிவந்ததடா
கண்ணாளா
என் செவ்விதழ்கள்



காதல்
பிணியால்
கன்றிச் சிவந்த
என்
செவ்வாயிதழ்
காயம் ஆறிட
முத்தமழை
பெய்யடா
சத்தமின்றி
எனை
கொய்யடா

முத்த மழையால்
எனை நீராட்டு
கண்ணாளா
என்
காதல் பித்தம்
தீரட்டும்